**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 66 **நாள்:** 31.01.2026

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் மூலம் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (31.01.2026) மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-66, கொளத்தூர், எஸ்.ஜே. அவென்யூ, எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் 186 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

**விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 05.01.2026 அன்று சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "உலகம் உங்கள் கையில்"எனும் மாபெரும் திட்டத்தின் மூலம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறையில் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்தும் வகையில் கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உட்பட பல்வேறு கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களுக்கு 10 இலட்சம் மடிக்கணினிகளை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அரசின் இத்தகைய முன்முயற்சிகள் மாணவர்களை உலகளாவிய போட்டித் திறன் கொண்ட மனித வளமாக அவர்களை உருவாக்கும் ஒரு வலுவான அடித்தளமாக திகழ்கிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று (31.01.2026) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின்கீழ், அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் 186 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை ஆணையாளர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், கல்லூரி முதல்வர் திருமதி சி.லலிதா, மாமன்ற உறுப்பினர் திருமதி யோகப்பிரியா, திரு.எ.நாகராஜன், திருமதி பி.அமுதா மற்றும் அலுவலர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**